9–3 a.m. SRI S. LAZAR : சார், இந்த ரீஆர்கனேசேஷனே அடுத்தாற் போல, ஏற்கனவே ப்ரையாரிடி லிஸ்ட் தயாரிக்கப்பட்டிருக்கிறதே, பைர் சர்விஸ் ஸ்டேஷன்களுக்கு, அதையும் சேர்த்து ரிவைஸ் செய்யப்படுமா, இப்பொழுது இருக்கக்கூடிய திட்டத்திலேயே, மாறுதல் செய்யப்பட்டு அடிப்படையில் மாறுதல் செய்யப் படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பைர் சர்விஸ் ஸ்டேஷன்கள் அமைப்பது வேறு விஷயம், அது வரவு செலவு திட்டம் போடும்போது கவனிக்கப்படும்.

SRI V. SUBBIAH : கிராமாந்திரப் பகுதிகளுக்காக சமுதாய நல கேந்திரங்களில் தீ அணைக்கும் படைகள் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தீ அணைக்கும் படைகள் நகரப்புரங்களில் அமைக்கப்படுகின்றன; அங்கு அதிகமாக தீ ஏற்படக் காரணங்கள் இருக்கின்றன. கிராமங் களுக்கு தீ அணைக்கும் ஸ்க்வாட் இருக்கிறது. அதைப்பற்றி அடுத்த கேள்வியில் சொல்லுகிறேன்.

SRI R. SRINIVASA IYER : Sir, is there any proposal to establish a fire station at least in every taluk headquarters?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir. There is no such proposal. It is not possible to establish fire stations in every taluk headquarters at present.

* 124 *Q.*—SRI K. RAMACHANDRAN (on behalf of SRI M. JAGANNATHAN) : Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken to increase the number of Village Fire Watching and Fire Fighting Squads functioning in the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The District Fire Officers visit at least four villages every month and have direct contact with the members of the squads and inspect the entire village with the members of the squads explaining the special hazards due to fire and the ways of reducing them.

Sanads are issued to members of the squads as a mark of recognition of their voluntary service and with a view to encourage the enthusiasm of the villagers in the formation of new squads and for the efficient working of the existing ones.

Salary of Teachers

* 125 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the salary of teachers in elementary schools under private management and the grants now actually sent to them by money order by the Government in the case of non-fee levying schools are the same;

11th December 1959]

(b) if there is difference, how the Government propose to make good the same; and

(c) whether the consent of teachers have been obtained by the Government before the introduction of the new procedure of sending the grants by money order to the teachers?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) They are the same in almost all the cases. In the few cases where the salary that was paid was higher than that admissible on the Government scale of pay, only the latter will be sent to the teachers.

(b) The matter is under consideration.

(c) No, Sir.

SRI K. VINAYAKAM : Sir, is it not a fact that the Madras Guild of Teachers have tabled an objection and a request to the Government that there is disparity in the scales of pay and the amount sent by money order to the teachers in the City of Madras? If so, what is the Government going to do with this kind of representation?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not know to what representation the hon. Member is referring to. Generally, there are two representations. (1) That the money order commission should not be deducted from their pay and that is under the consideration of the Government, and find out an alternative scheme wherein the incurring of money order commission expenditure will not be there. Second question is about the quantum of pay paid to the individual teachers. In some cases they have been receiving a pay much higher than the Government scale of pay. We have undertaken to pay only the Government scale of pay and that has been agreed to. I do not think it would be possible to go beyond that.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்கு சம்பளம் அனுப்புவதில், மணியார்டர் கமிஷன் கழிப்பதைப்பற்றி ஆலோசித்து வருவதாகச் சொன்னார்கள். ஜூலை முதல் இப்பொழுது நான்கு மாதங்கள் ஆகின்றன, இன்னும் டிசம்பரில் ஆலோசனை செய்யும் நிலையிலேயே இருக்கிறார்களா? விரைவில் ஒரு முடிவுக்கு வருவார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : வெறும் ஆலோசனை மட்டுமல்ல; ஆலோசனை செய்து, முடிவு எடுத்து, அமலாக்குவதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். எந்த முறையிலே ஏற்பாடு செய்யவேண்டுமென்பது ஆலோசனையில் இருக்கிறது.

SRI V. SANKARAN : மணியார்டர் மூலம் அனுப்புவதற்குப் பதில், பே ஆபீசர் என்று ஒருவரை நியமிக்கலாம் என்று ஒரு ஸஜஷன் கொடுக்கப்பட்டதா? அது ஏற்றுக்கொள்ளப்படுமா? அப்படிச் செய்யும்போது . . .

[11th December 1959

MR. SPEAKER: One question at a time.

THE HON. SRI C. SUBRAMANIAM: பே ஆபீசர் நகரங்களிலே வைக்க முடியும். கிராமங்களில் வைப்பதால் ஆசிரியர்களுக்கு நன்மை ஏற்படாது. நகரங்களுக்கு என்ன செய்ய வேண்டும். கிராமங்களுக்கு என்ன பண்ணவேண்டும் என்பது பற்றி யெல்லாம் கூடிய சீக்கிரத்தில் முடிவு எடுக்கப்படும்.

* 126 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) when the pay of teachers in private aided schools in the City for December 1958 was paid to them; and

(b) the reasons for the delay, if any, in paying the salaries?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) The teaching grant bills for the month of December 1958, in respect of aided elementary schools in the City were issued on 24th and 28th February and 3rd, 4th and 16th March 1959

(b) The delay was due to the fact that final teaching grant statements were not received in time.

SRI N. K. PALANISAMI: Sir, May I know why the amount paid to the teachers directly is treated as grant and not as salary. Since it is treated as grant only 75 per cent of the grant are given every month but no grant is given for the month of December and hence the teachers suffer. Will the Government take steps to treat this grant as salary for every month the teacher is paid?

THE HON. SRI C. SUBRAMANIAM: There are two questions. Giving aid to the management schools and that will have to be in the form of grant. If the management should depend upon every month for the payment of salaries only from the Government then they do not contribute anything to the running of the school. That is why the management which receive aid will have to find some money to pay the salaries of the teachers. That much at least it should be possible for them to do. But in certain cases we are paying them direct in which case the question does not arise.

SRI M. S. SELVARAJAN: மானேஜ்மெண்ட் பாடசாலைகளிலே உள்ள ஆசிரியர்களுக்கு நேரிடையாகப் பட்டுவாடா செய்யாமல், கிராண்ட் இன் எய்ட் திட்டத்தின் கீழே தரப்படுவதற்குப் பதில், அம்மாதிரி கொடுக்கும்போது கடைசி மாதங்களுக்கு வராமல் இருக்கலாம் என்று ஒரு தயக்கம் தென்படுகிறது. ஆகவே, 15 பர்சண்ட் வரை மெயின்டினன்ஸ் கிராண்ட் எதிர்பார்த்து இந்த ஆசிரியர்களுடைய சம்பளத்தை மாதாமாதம் கொடுக்க வழி செய்யப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: நேரிடையாக சம்பளம் பெருகிறவர்களுக்கு என்ன செய்யவேண்டும் என்று யோசனை செய்ய வேண்டும். சம்பளம் ஜனவரி, பெப்ரவரி, மார்ச்சுக்கு மட்டும் கொடுக்காமல் இருக்க முடியாது. அது யோசித்துப் பார்க்க வேண்டிய விஷயம்.